ஆழி சர்வதேச தமிழிலக்கிய ஆய்விதழ்
Aazhi International Journal of Tamil Literature Studies
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
E-ISSN: 2583-7931
OPEN ACCESS

# First Female Illakani (Grammarian) Kakaipadiniyar

# முதல் பெண் இலக்கணி காக்கை பாடினியார்

Dr. S. Senthamizhpavai
*Professor & Director, Centre for Tamil Culture, Alagappa University, Karaikudi, India*
முனைவர் சே. செந்தமிழ்ப்பாவை
*பேராசிரியர் (ம) இயக்குநர், தமிழ்ப்பண்பாட்டு மையம், அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி, இந்தியா*

***Article Info:***

Received 03-12-2022 | Accepted 02-01-2023 | Published 31-01-2023
Volume 01 Issue 01 January 2023 | Page No : 01-03

**ABSTRACT**

Kakaipadiniyam is the first monograph on yapilakanam in Tamil was written by a female writer kakaipadiniyar. It is to better to pluck pears than to learn and sing poetry. The statement implies that the application is hard. Such a difficult time kakaipadiniyam was penned by kakaipadiniyar who is the first woman grammarian. Based on kakaipadiniyam, Sangyappu, Sirukakapadiniyam, yapparunkalam, yapparangalakkarikai texts appeared. The purpose of this article is to throw limelight on the female grammarian Kakaipadiniyar and her work.

***Keywords:***

*Author's biography, Structure of Book, Seer, Thalai, Adi, Thodai, seyuliyal, Venba, Asiriyappa, kalippa, vanchippa, Marutppa - poduviyal*

## முன்னுரை

தமிழில் யாப்பிலக்கணம் குறித்துப் பேசும் முதல் தனிநூல் காக்கைபாடினியம் ஆகும். இதனை எழுதியவர் காக்கை பாடினியார் என்னும் பெண்பாற்புலவர் ஆவார். காரிகை கற்றுக் கவிபாடுவதை விடப் பேரிகை கொட்டிப் பிழைப்பதே மேல் என்னும் கூற்று யாப்பிலக்கணம் கடினம் என்பதை உணர்த்தும். இத்தகு கடின யாப்பிலக்கணத்தை எழுதிய முதல் பெண் இலக்கணியாகக் காக்கைபாடினியார் விளங்குகிறார். இத்தகு சிறப்புடைய பெண் இலக்கணி குறித்தும் அவர்தம் நூல் குறித்தும் எடுத்துரைப்பது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## காக்கைபாடினியார் பெயர் மரபு

காக்கைபாடினியார் என்னும் புலவர் சிறு காக்கைபாடினியார் என அழைக்கப்படுகிறார். பாடுவதையே தொழிலாகக் கொண்ட பழந்தமிழ்க் குடியினர் பாணர் எனவும், அப்பாணர் குடிப் பெண்கள் ‘பாடினி’ எனவும் அழைக்கப்பட்டனர். காக்கைபாடினியாரும் இம்மரபில் வந்தவராகக் கருத இடமுண்டு.

“காக்கையை நோக்கி விருந்து வரக் கரைவாய் என்று பாடிய பெண்பாற்புலவர் ஒருவர் நச்செள்ளையார் என்றது சங்கத் தமிழ் உலகு (குறுந்.210). அவர் பெயர் வழி வழியாகச் சூட்டப்பெற்ற பெருமையால் பெயர் பெற்றவர்கள் காக்கை பாடினியாரும், சிறு காக்கைபாடினியாரும் எனலாம்” (த.இ.நூ.ப.105) என்னும் இரா.இளங்குமரனாரின் கூற்றும் ஈண்டு கருதத்தக்கது.

காக்கை பாடினியார் என்னும் பெயர் குறித்து ச.வே.சு. அவர்கள், “பாலையைப் பாடியவர் பாலை பாடிய பெருங்கடுங்கோ என அழைக்கப் பெற்றார். பாரதத்தைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார் என அழைக்கப்பெற்றார். மருதத்தைப் பாடியவர் மருதம் பாடிய இளங்கடுங்கோ என வழங்கப்பெற்றார். அது போன்று காக்கையைப் பாடினமையால் காக்கை பாடினியார் என்று அழைக்கப் பெற்றிருத்தல் வேண்டும்” அப்புலவர் பெயரால் பெயர் பெற்றவர் இவர் என்று குறிப்பிடுவர் (த.இ.நூ.ப.105) காக்கைபாடினியார் குறித்து யாப்பருங்கல விருத்தியுரை,

**தொல்காப்பியப்புலவோர் தோன்ற விரித்துரைத்தார்**
**பல்கா யனார் பகுத்துப் பன்னினார், - நல்யாப்புக்**
**கற்றார் மதிக்குங் கலைக் காக்கை பாடினியார்**
**சொற்றார்தம் நூலுள் தொகுத்து**

என்று புகழ்ந்தேத்துகிறார். இதில் கலைக்காக்கைபாடினி என்று சுட்டப்பெறுவதால் இவரைப் பாடினி மரபினராகக் கொள்ளல்தகும்.

## நூல் அமைப்பு

காக்கை பாடினியம் என்னும் யாப்பிலக்கண நூல் தனி நூலாக முழுமையாகக் கிடைக்கவில்லை. தொல்காப்பிய உரைகளிலும், நன்னூல் மயிலை நாதர் உரையிலும், களவியல் உரையிலும், வீரசோழியம் உரையிலும் காக்கை பாடினியம் பற்றிய குறிப்புகள் காணக்கிடைக்கின்றன. யாப்பருங்கலம் விருத்தியுரையிலும் யாப்பருங்கலக் காரிகை உரையிலும் காக்கை பாடினிய நூற்பாக்கள் எடுத்தாளப் பெற்றுள்ளன.

இந்நூற்பாக்களை மயிலை சீனி. வேங்கடசாமி 'மறைந்து போன தமிழ் நூல்கள்' என்ற நூலில் தொகுத்துத் தந்துள்ளார். அவற்றை அறிஞர் இரா.இளங்குமரன் இயல் பகுத்துத் தந்துள்ளார். அந்த வகையில் காக்கை பாடினியத்தில் மொத்தம் 89 நூற்பாக்கள் அவை, உறுப்பியல், செய்யுளியல், பொதுவியல் என மூன்று இயல்களாகப் பகுக்கப் பெற்றுக் காணக் கிடைக்கின்றன.

### அசை

உறுப்பியலில் 45 நூற்பாக்கள் உள்ளன. இதில் அசைக்கு உறுப்பாகும் எழுத்தின் வகை, ஆய்தமும் ஒற்றும் அலகு பெறுமிடம், இகரம், உகரம், உயிரளபெடை ஆகியவற்றிக்குச் சிறப்புவிதி ஆகியவை பேசப்பெற்றுள்ளன. இதனையடுத்து அசைகளின் வகைகளாகத் தனியசை, இணையசை பற்றியும் நெடிலொடு நெடிலும் நெடிலொடு குறிலும் இணையசையாகது என்பதும்,

**ஐயென் நெடுஞ்சினை ஆதி ஒழித்தல**
**கெய்தும் இணையசை என்றிசி னோரே** (கா.பா-7)

என்பதில் ஐகாரத்திற்குச் சிறப்புவிதியும் கூறப்பெற்றுள்ளன.

### சீர் மற்றும் தளை

சீர்குறித்து 8 நூற்பாக்கள் காணப்பெறுகின்றன. இதில் சீருக்குரிய விளக்கம் இயற்சீர், இயற்சீர் ஆசிரிய உரிச்சீர் எனவும் அழைக்கப்பெறுதல், இயற்சீரும், உரிச்சீரும் பயின்றுவரும் இடங்கள், இயற்சீர் உரிச்சீர் வருமிடங்களுக்குரிய சிறப்பு விதி, வஞ்சி உரிச்சீர் வருமிடங்களுக்குரிய சிறப்புவிதி, வஞ்சி ஆசிரியத்துள் பயின்று வராமை, நாலசைச்சீர் செய்யுளில் பயின்றுவரும் முறை ஆகியவை குறித்து உரைக்கப்பெற்றுள்ளன. இதனையடுத்து ஆசிரியத்தளை, இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை, கலித்தளை, வஞ்சித்தளைகள் குறித்த செய்திகள் இடம்பெற்றுள்ளன.

**தன்சீர் இரண்டு தலைப்பெயல் தம்முளொத்**
**தொன்றினும் ஒன்றா தொழியினும் வஞ்சியின்**
**பந்தம் எனப்பெயர் பகரப் படுமே** (கா.பா-20)

என்பது வஞ்சித்தளைக்குரிய இலக்கணமாகும்.

### அடி

குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி என்னும் அடியின் வகைகள், பாக்களுக்குரிய அடிவகை, பாவினங்களுக்குரிய அடிவகை, பாக்களின் அடிப்பெருமை அடிச்சிறுமை ஆகியவை 11 நூற்பாக்கள் இடம்பெற்றுள்ளன (கா.பா.21-31). பாக்களின் அடி வரையறை குறித்து இடம்பெற்றுள்ள,

**உரைப்போர் குறிப்பினை அன்றிப் பெருமை**
**வரைத்தித் துனணயென வைத்துரை இல்லென்**
**றுரைத்தனர் மாதோ உணர்ந்திசி னோரே** (கா.பா-31)

என்னும் நூற்பா படைப்பாளியின் சுதந்திரத்தை உணர்ந்து எழுதப்பெற்றதாகும்.

### தொடை

தொடை என்பதன் இலக்கணம் பதினைந்து தொடைகளுக்குரிய இலக்கணம், அதற்குரிய சிறப்பு விதி ஆகியவை 14 நூற்பாக்களில் விளக்கப்பெற்றுள்ளன. (கா.பா.32-45)

செய்யுளியல்

**சிறந்துயர் செப்பல் இசையன வாகி**
**அறைந்த உறுப்பின் அகறல் இன்றி**
**விளங்கக் கிடப்பது வெண்பா ஆகும்.** (கா.பா.46)

என்றும் நூற்பாவில் வெண்பாவின் இலக்கணமும் இதனையடுத்து வெண்பாவின் வகைகள், வெண்பாவின் இனங்கள், கலிப்பா, அதன் இனங்கள், வஞ்சிப்பா அதன் இனங்கள் மருட்பா ஆகியவை குறித்து 41 நூற்பாக்களில் விளக்கப்பெற்றுள்ளன. (கா.பா.46-86) பொதுவியலில் தனிச்சொல், புறநடை (கா.பா.87-89) ஆகியவை குறித்து விளக்கப் பெற்றுள்ளன. மேற்சுட்டியவை காக்கைபாடினியத்தின் அமைப்பு முறை மற்றும் செய்திகளாகும்.

### முடிவுரை

கி.பி ஆறாம் நூற்றாண்டில் தோன்றிய காக்கைபாடினியம் யாப்பிலக்கணத்திற்கென முதலில் தோன்றிய தனி நூலாகும். யாப்பிலக்கண மரபுகளை முதலில் எடுத்துரைத்த தொல்காப்பியர் அசைகளை நேர், நிரை எனப் பகுத்ததோடு,

**இருவகை உகரமொடு இயைந்தவை வரினே**
**நேர்பும் நிரைபும் ஆகும் என்ப,**
**குறில்இணை உகரம் அல்வழி யான.** (தொல்.1261)

நேர்பு, நிரைபு என்றும் அசைகளைக் குறிப்பிடுகின்றார். காக்கைபாடினியார் நேர்; நிரை ஆகிய அசைகளை மட்டுமே குறிப்பிடுகிறார். இது குறித்து யாப்பருங்கல விருத்தியுரைகாரர், நேர்பசை, நிரைபசை வேண்டாது நேரசை, நிரையசை வேண்டினார் நாலசைப் பொதுச்சீர் வேண்டினார் காக்கைபாடினியார் முதலிய ஒரு சாராசிரியர் என்று விளக்குவது காக்கைபாடினியத்தின் சிறப்பினை விளக்கும்.

காக்கைபாடினியத்தைப் பின்பற்றி பின் வந்த யாப்பிலக்கண நூல்கள் அனைத்தும் நேர்பு அசை, நிரைபசையை நீக்கி, நேரசை, நிரையசையை மட்டுமே குறிக்கின்றன. தொல்காப்பியர் நாலசைச் சீர்களைக் குறிப்பிடவில்லை. காக்கைபாடினியம் நாலசைச் சீர்களைக் குறிப்பிடுகிறது. தொல்காப்பியம் எழுத்தளவால் சீர்களைக் கணக்கிடுகிறது. காக்கைபாடினியம் அசை அளவினால் சீர்கனைக் கணக்கிடுகிறது.

தொல்காப்பியம் பாவினங்களை விரித்துரைக்கவில்லை. காக்கைபாடினியம் பாவினங்கள் குறித்து மிக விரிவாகப் பேசுகிறது. இங்ஙனம் தொல்காப்பிய மரபுகளை விடுத்து, புதிய இலக்கண மரபுகளை உருவாக்கிய பெருமை காக்கைபாடினியாருக்குண்டு.

காக்கைப் பாடினியத்தை அடிப்படையாகக் கொண்டு சங்கயாப்பு, சிறுகாக்கைபாடினியம், யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை முதலான யாப்பிலக்கண நூல்கள் தோன்றிமை காக்கை பாடினியாரின் யாப்பிலக்கண மரபிற்குக் கிடைத்த பெரும் வெற்றியாகும். மேலும்,

**சொல்லிற் சுருங்கிப் பொருள் பெருகித் தொன்ஞானம்**
**எல்லாம் விளக்கி இருள் அகற்றும் - நல்யாப்பாம்**
**காக்கை பாடினியம் எனும் நூலைக் கற்றவர்தான்**
**யாக்கையால் பெற்ற பயன்.**

என்னும் வெண்பா பிறவி எடுத்ததன் பயன் காக்கைபாடினியத்கைக் கற்பதால் நிறைவேறும் என்றுரைப்பது காக்கை பாடினியத்தின் சிறப்பினையும் இலக்கணம் படைத்த காக்கை பாடினியாரின் சிறப்பினையும் நன்கு விளக்கும்.

## துணை நூற்பட்டியல்


1. இரா, இளங்குமரன். *காக்கைபாடினியம் - மூலமும் விளக்கச் சிற்றுரை*. சைவ சித்தாந்த கழகம், 1974.
2. ச வே, சுப்பிரமணியன். *தமிழ் இலக்கண நூல்கள் (ப.ஆ)*. மெய்யப்பன் பதிப்பகம், 2007.
3. இரா, இளங்குமரன். *இலக்கண வரலாறு*. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1974.
4. தமிழண்ணல். *தொல்காப்பியம் மூலமும் கருத்துரையும்*. மீனாட்சி புத்தக நிலையம். 2008.
5. கு வெ, பாலசுப்பிரமணியன். *தொல்காப்பியம் மூலமும் உரையும்*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 2019.


## References


1. Ira, Ilangumaran. *Kakaipadiniyam*. Saiva Siddhanta Kazhagam, 1974.
2. S V, Subramanian. *Tamil Grammar Texts (P.A.)*. Meiyappan Publishing House, 2007.
3. Ira, Ilangumaran. *History of Grammar*. Saiva Siddhanta Publishing House, 1974.
4. Tamilannal. *Tolkappiyam Source and Commentary*. Meenakshi Bookstore, 2008.
5. K V, Balasubramanian. *Tolkappiyam Source and Text*. New Century Book House (B) Ltd, 2008.


**How to cite this article:** S, Senthamizhpavai. "First Female Illakani (Grammarian) Kakaipadiniyar". *Aazhi International Journal of Tamil Literature Studies*, vol. 1, no. 1, Jan. 2023, pp. 1-3, https://aijtls.com/index.php/aijtls/article/view/1.

This is an open access journal, and articles are distributed under the terms of the Creative Commons Attribution-Non Commercial-ShareAlike 4.0 International License, which allows others to remix, tweak, and build upon the work non-commercially, as long as appropriate credit is given and the new creations are licensed under the identical terms.